**செய்தி வெளியீடு எண்: 119** **நாள்: 15.02.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>இணையநெறிமுறை புகைப்படக்கருவிகள் திட்டம் (IP Camera Project) புதுப்பொலிவுடன் 18.2.2019 முதல் நடைமுறைபடுத்துதல்</u>

பதிவுத்துறையில் மின்னணு ஆளுமை முழுவீச்சில் நடைமுறைப்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு எளிதாக விரைந்து சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் மற்றும் திருமணப் பதிவு நிகழ்வுகள் இணையநெறிமுறை புகைப்படக்கருவிகள் (IP Camera) வழி படம் பிடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென பொதுமக்களிடமிருந்து ரூ.50/- கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்திலிருந்த குறைபாடுகள் களையப்பட்டு 18.2.2019 முதல் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படுகிறது.

சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணப்பதிவு/திருமணப்பதிவு முடிந்தவுடன் அப்பதிவு நிகழ்விற்கான காகித உறையிலிடப்பட்ட ஒளிப்பட குறுந்தகடு (DVD) மற்றும் பிரத்தியேகமான காகித ஆவணப் பாதுகாப்பு உறையில் இடப்பட்ட ஆவணம்/திருமணச் சான்று ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்படும். எனவே, பொதுமக்கள் பதிவு நிறைவடைந்தவுடன் பதிவு செய்யப்பட்ட ஆவணம் / திருமணச் சான்று ஆகியவற்றை பெற்றுக்கொள்ளும் போது மேற்படி ஒளிப்பட குறுந்தகட்டில் நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்து கொண்டு பெற்றுச்செல்ல கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதில் பொதுமக்களுக்கு ஏதேனும் சிரமங்கள் இருப்பின் பதிவுத்துறைத் தலைவர் அலுவலக கட்டணமில்லா தொலைபேசி எண்.**1800 102 5174**-ஐ தொடர்புகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**